بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுஉத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 01/04/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுஉமுஆ பேருரையின் சுருக்கம்**

திருக்குர்ஆன் வசனங்கள், வரலாற்று சான்றுகள் மற்றும் அஹ்மதியத்தின் கலீஃபாக்களுடைய வழிகாட்டல்களின் ஒளியில் பார்க்கும் போது, முர்தத் –கான தண்டனை மரணம் கிடையாது என்பது நிரூபணமாவதுடன், முர்தத் –கான தண்டனை மரணமேயாகும் என்று கருதப்படும் கொள்கையையும் இது தெளிவாக மறுக்கிறது

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்து குழப்பங்களைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஸிர்ருல் கிலாஃபா எனும் நூலில் கூறுகிறார்கள்: இப்னு கல்தூன் மற்றும் இப்னு அஸீர் ஆகியோர் எழுதுவதாவது; பனூ தை, பனூ அஸது துலைஹா, பனூ ஃகத்ஃபான், பனூ ஹவாஸன் மற்றும் பனூ ஸுஉலைம் ஆகிய கோத்திரங்களுடன் அரேபியாவின் பொதுமக்களும் முக்கியஸ்தர்களும் முர்தத் ஆகிவிட்டனர். அவர்கள் ஸகாத் கொடுப்பதை நிறுத்திவிட்டனர். தம் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாகவும், தாம் சிறுபான்மையினராகவும் எதிரிகள் பெரும்பான்மையினராக இருப்பதன் காரணமாகவும் முஸ்லிம்களின் நிலை, மழை இரவில் செம்மறி ஆடுகளின் நிலை போன்றதாகி விட்டது. அதாவது அச்சத்தினால் அவை ஓரிடத்தில் ஒன்றுகூடி விடுகின்றன. இதைக்கண்ட மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், இப்போது உசாமா (ரலி) அவர்களின் படையை நம்மிடமிருந்து பிரித்து அனுப்ப வேண்டாம் என்று கூறினார்கள். ஆனால், எந்த முடிவை ஹஸ்ரத் ரஸுஉலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எடுத்தார்களோ அதை என்னால் இரத்து செய்ய முடியாது என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியதாவது; ஹஸ்ரத் ரஸுஉலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மூலமாக அல்லாஹ் எங்கள் மீது பேருபகாரம் செய்திருக்காவிட்டால் நாங்கள் அழிந்திருப்போம். நாங்கள் ஸகாத்தை வசூலிப்பதற்காகப் போரிடுவோம் என்றும், மரணம் எங்களை அரவணைக்கும் வரை அல்லாஹ்வை வணங்கிக் கொண்டே செல்வோம் என்றும் அன்னார் எங்களை ஒன்று கூட்டினார்கள்.

முழு அரேபியாவும் முர்தத் ஆன போது, ஸகாத் கொடுக்க மறுத்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த அனைவருக்கெதிராகவும் போர் செய்தார்கள். வரலாற்று நூல்களிலும், வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் இந்த அனைத்து மக்களுக்காகவும் முர்தத் எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவேதான் முர்தத் -கான தண்டனை மரணமாகும் என்று வாழ்க்கை வரலாறு எழுதக்கூடியவர்களுக்கும், ஆலிம்களுக்கும் தவறு ஏற்பட்டுள்ளது. திருக்குர்ஆனோ அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ முர்தத் - க்கான தண்டனை மரணம் என்று கூறவில்லை.

அல்லது வேறு ஏதேனும் தண்டனையை நிர்ணயிக்கவுமில்லை. இது தொடர்பாக சில வசனங்கள் எடுத்து வைக்கப்படுகின்றன.

وَمَنْ يَّرْتَدِدْ مِنْكُمْ عَنْ دِيْنِهٖ فَيَمُتْ وَهُوَ كَافِرٌ فَاُولٰٓئِكَ حَبِطَتْ اَعْمَالُهُمْ فِى الدُّنْيَا وَالْاٰخِرَةِ ۚ وَاُولٰٓئِكَ اَصْحٰبُ النَّارِ ۚ هُمْ فِيْهَا خٰلِدُوْنَ ۝

''உங்களுள் எவராவது தனது மார்க்கத்தில் இருந்து திரும்பி, நிராகரித்த நிலையிலேயே மரணமடைந்து(ம்) விட்டால், அவர்களின் செயல்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் வீணாகி விடும். அத்தகையோர் நரகத்திற்குரியவர்களாவர். அவர்கள் அதிலேயே நெடுங்காலம் இருப்பர்.'' **(திருக்குர்ஆன் 2: 218)**

முர்தத் - க்குத் தண்டனையாக மரண தண்டனை விதிக்கப்படவில்லை என்பது இதிலிருந்து நன்கு தெளிவாகிறது. ஏனென்றால் அவருக்குத் தண்டனையாக மரணம் விதிக்கப்பட்டிருக்கும் என்றால், அவர் இறுதியில் அதே குஃப்ரான நிலையில் மரணித்து விட்டாலும் கூட என்று கூறப்பட்டிருக்காது.

اِنَّ الَّذِيْنَ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ اٰمَنُوْا ثُمَّ كَفَرُوْا ثُمَّ ازْدَادُوْا كُفْرًا لَّمْ يَكُنِ اللّٰهُ لِيَغْفِرَ لَهُمْ وَلَا لِيَهْدِيَهُمْ سَبِيْلًا ۝

''நம்பிக்கை கொண்டு பின்னர் நிராகரித்துப் பின்னர் நம்பிக்கை கொண்டு அதன் பின்னரும் நிராகரித்துப் பின்னர் நிராகரிப்பில் (மேலும்) முன்னேறிவிடுகின்றவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்க மாட்டான். அவர்களுக்கு எந்த வழியையும் காட்டவும் மாட்டான்.'' **(திருக்குர்ஆன் 4: 138)**

இதில் முர்தத் உடைய தண்டனை, மரணம் கிடையாது என்று மிகவும் தெளிவாக மறுக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவே நம்முடைய இலக்கியங்களில் விளக்க உரையாக எடுத்துரைக்கவும்படுகிறது.

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தமது தர்ஜுமத்துல் குர்ஆனில் இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்கள்:** யாராவது முர்தத் ஆகிவிட்டால் பிறகு ஈமான் கொண்டால், பிறகு முர்தத் ஆகிவிட்டால் பிறகு ஈமான் கொண்டால், அவருக்கான தீர்ப்பு அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது. அவர் குஃப்ரான நிலையில் மரணித்து விடுவார் என்றால், நிச்சயமாக அவர் நரகவாதியாக இருப்பார். முர்தத் -கான தண்டனை மரணமாக இருந்திருக்கும் என்றால், அவர் மீண்டும் மீண்டும் ஈமான் கொள்வது குறித்தும் பிறகு நிராகரிப்பது குறித்தும் பேச்சுக்கே இடமிருந்திருக்காது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* மார்க்கத்தில் எந்தவிதமான பலவந்தமும் இருக்கக்கூடாது என மறுத்தவாறு இறைவன் கூறுகின்றான்:

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ ۙ قَدْ تَّبَيَّنَ الرُّشْدُ مِنَ الْغَىِّ ۚ فَمَنْ يَّكْفُرْ بِالطَّاغُوْتِ وَيُؤْمِنْ بِاللّٰهِ فَقَدِ اسْتَمْسَكَ بِالْعُرْوَةِ الْوُثْقٰى ۗ لَا انْفِصَامَ لَهَا ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ ۝

''மார்க்கத்தில் எவ்வித கட்டாயமும் இல்லை. நிச்சயமாக நேர்வழிக்கும் வழி கேடுக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. எனவே ஷைத்தானை நிராகரித்து, அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்கிறவர் அறுந்துவிடாத மிகவும் உறுதியுள்ள நம்பத் தகுந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டார். மேலும் அல்லாஹ், நன்கு செவியேற்பவனும் நன்கு அறிபவனுமாவான்.'' **(திருக்குர்ஆன் 2: 257)**

திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் முனாஃபிக்கள் குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாறான எந்த ஒரு முனாஃபிக் -காகவும் ஏதேனும் ஒரு தண்டனை வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. எந்த ஒரு முனாஃபிக் -க்கும் அவருடைய

நயவஞ்சகத்தின் காரணமாக ஏதேனும் தண்டனை கொடுக்கப்பட்டதாகக் கூறப்படவில்லை. இதற்கு இஸ்லாமிய வரலாறு சாட்சியாக உள்ளது. முனாஃபிக்களைப் பற்றி எடுத்துரைத்தவாறு திருக்குர்ஆன் கூறுகிறது:

قُلۡ اَنۡفِقُوۡا طَوۡعًا اَوۡ كَرۡهًا لَّنۡ يُّتَقَبَّلَ مِنۡكُمۡ ؕ اِنَّكُمۡ كُنۡتُمۡ قَوۡمًا فٰسِقِيۡنَ ۝ وَمَا مَنَعَهُمۡ اَنۡ تُقۡبَلَ مِنۡهُمۡ نَفَقٰتُهُمۡ اِلَّاۤ اَنَّهُمۡ كَفَرُوۡا

بِاللّٰهِ وَبِرَسُوۡلِهٖ وَلَا يَاۡتُوۡنَ الصَّلٰوةَ اِلَّا وَهُمۡ كُسَالٰى وَلَا يُنۡفِقُوۡنَ اِلَّا وَهُمۡ كٰرِهُوۡنَ ۝

“நீர் கூறுவீராக! நீங்கள் விருப்புடன் செலவு செய்தாலும் சரி! அல்லது வெறுப்புடன் செலவு செய்தாலும் சரி! எவ்வகையில் ஆனாலும் உங்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏனென்றால் நீங்கள் மோசமான தன்மையுள்ள மக்களாக இருக்கின்றீர்கள். அவர்களுடைய தானங்கள் ஏற்றுக்கொள்ளப்படாததற்கான காரணம், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் அவர்கள் நிராகரிப்பது, தொழுகையினை மிகுந்த சோம்பலுடன் அவர்கள் நிறைவேற்றுவது, இறைவழியில் வெறுப்புடன் அவர்கள் செலவு செய்வது ஆகியவற்றை தவிர வேறொன்றுமில்லை.” **(திருக்குர்ஆன் 9: 53-54)**

*ஹுஸூர் அவர்கள் கூறுகிறார்கள்:* எந்த அருளுக்குரியவர் மீது திருக்குர்ஆன் இறக்கப்பட்டதோ, எவர் كَانَ خُلُقُهُ الْقُرْآن ஆக இருந்தாரோ, அந்த அருளுக்குரியவர் முர்தத் தொடர்பாக என்ன கூறியிருக்கிறார்கள் என பார்ப்போம்.

ஸஹீஹ் புகாரியில் இச்சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. **ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** ஒரு காட்டரபி ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவாறு பைஅத் செய்தார். மறு நாள் அந்த காட்டரபிக்கு மதீனாவில் காய்ச்சல் வந்து விட்டது. அவர் ஹஸ்ரத் ரசூலே கரீம் (ஸல்) அவர்களிடம் வந்து, என்னுடைய பைஅத்தை எனக்கு திரும்ப தாருங்கள் என்று கேட்டார். அவர் மீண்டும் வந்தார். எந்த அளவுக்கு என்றால், மூன்று முறை அவர் அன்னாரிடம் வந்தார். ஆனால், ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்கள் மூன்று முறையும் மறுத்து விட்டார்கள். பிறகு அந்த காட்டரபி மதீனாவை விட்டுச் சென்று விட்டார். அந்த நபர் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களிடம் வந்து செல்வதும் கூட, முர்தத் -க்கு மரண தண்டனை நிர்ணயிக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இல்லையெனில் அவர் மீண்டும் மீண்டும் அன்னாரிடம் வந்து சென்றபோது ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்கள் அந்த நபரைப் பார்த்து, இஸ்லாத்தில் முர்தத் -க்கான தண்டனை மரணமாகும்! நீர் முர்தத் ஆகிவிட்டால் கொல்லப்படுவீர் என்று ஏன் கூறவில்லை? ஆகவே அந்த காட்டரபி மீண்டும் மீண்டும் முர்தத் ஆகும் தன் எண்ணத்தை வெளிப்படுத்துவதும், அவர் ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களிடம் மீண்டும் மீண்டும் வந்து செல்வதும், அவர் முர்தத் ஆனதன் காரணமாக ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்கள் அவருக்கு எச்சரிக்கை விடுக்காமல் இருப்பதும், அவரைக் கொன்று விடுமாறு சஹாபிகளிடம் கட்டளையிடாமல் இருப்பதும், இறுதியில் எவ்வித ஆட்சேபனையும் இன்றி அவர் மதீனாவை விட்டு வெளியேறுவதும் - இந்த அனைத்து விஷயங்களும் இஸ்லாத்தில் முர்தத் -க்கு ஷரீஅத் ரீதியாக எவ்வித கட்டுப்பாடுகளும் கிடையாது என்றே தெளிவாக நிரூபிக்கின்றன. அவர் வெளியேறிவிட்ட பிறகு ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்கள் ஒரு விதத்தில் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு, மதீனா ஒரு நெருப்பு உலையைப் போன்றது; அது குளத்திலிருந்து அழுக்கு அசுத்தங்களை வெளியேற்றி விடுகின்றது என்று கூறினார்கள். பலவந்தமாக ஒருவரை இஸ்லாத்தில் வைக்கும் கொள்கைக்கு அன்னார் எதிரானவராக இருந்தார்கள் என்பதையே இவை அனைத்தும் தெளிவாகத் தெரிவிக்கின்றன.

இவ்விவகாரத்தில் இரண்டாவது சான்று, ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் இரண்டாவது நிபந்தனையாகும். அந்த நிபந்தனையில், 'முஸ்லிம்களிலிருந்து எவராவது முர்தத் ஆகி முஷ்ரிக்களின் பக்கம் சென்றுவிட்டால் முஷ்ரிக்குகள் அவரைத் திரும்ப அனுப்ப மாட்டார்கள்' என்று எழுதப்பட்டது. இஸ்லாமிய ஷரீஅத்தில் முர்தத் -க்கு மரண தண்டனை நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்றால் ஷரீஅத்தினுடைய வரம்பு விவகாரங்களில் ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் முஷ்ரிக்களின் பேச்சை ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. இதைத் தவிரவும் இன்னும் பல சம்பவங்களும் உள்ளன. அவற்றைக் காணும் போது, ஹஸ்ரத் நபீ கரீம் (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய காலகட்டத்தில் சில மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு முர்தத் ஆனார்கள் என்று தெரிய வருகிறது. ஆனால், அவர்கள் யுத்தம் அல்லது கிளர்ச்சி போன்ற ஏதேனும் தீய செயலை செய்தாலேயொழிய முர்தத் ஆன காரணத்திற்காக மட்டும் அவர்களுக்கெதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நாம் எங்கும் காண முடியாது.

**இந்தக் குர்ஆன் வசனங்கள் மற்றும் வழிகாட்டல்களின் ஒளியில் முர்தத் -கான தண்டனை மரணம் கிடையாது என்று நிரூபணமாகி விட்டது. ஆனால் இப்போது எழுகின்ற கேள்வி என்னவென்றால், முர்தத் -கான தண்டனை மரணம் கிடையாது என்றால் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களை கொலை செய்யுமாறு ஏன் கட்டளையிட்டார்கள்?**

உண்மை என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் முர்தத் ஆனவர்கள் வெறும் முர்தத்களாக மட்டும் இருக்கவில்லை; மாறாக அவர்கள் இரத்தவெறி கொண்ட கிளர்ச்சியாளர்களாகவும் இருந்தனர். அவர்கள் மதீனத்து ஆட்சியின் மீது தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களை கொலை செய்ய படுபயங்கர திட்டம் தீட்டியவர்கள் மட்டுமின்றி, பல்வேறு பகுதிகளில் இருந்த முஸ்லிம்களைப் தேடிப்பிடித்து மிகவும் இரக்கமற்ற முறையில் கொன்றவர்களும்கூட! அதன் காரணமாக தற்காத்துக் கொள்ளுவதற்காகவும் பழிக்குப் பழி வாங்குவதற்காகவும் தாக்குதல் தொடுத்த அவர்களுடன் போர் செய்யப்பட்டது.

وَ جَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثۡلُهَا ஒரு தீங்கிற்குரிய கூலி அதேயளவு தீங்கேயாகும் என்பதற்கிணங்க அவர்கள் செய்த குற்றங்களுக்காக, அவர்களுக்கு அதேபோன்ற தண்டனை கொடுத்து கொல்லுமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அல்லாமா தபரீ எழுதுகிறார்கள்: தாக்குதல் தொடுத்த பல்வேறு சமுதாயங்களை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தோற்கடித்த போது, பனூ ஸுப்யான் மற்றும் அபஸ் ஆகியோர் - அவர்களிடையே வசித்துவந்த, இஸ்லாத்தில் நிலைத்திருந்த முஸ்லிம்களின் மீது தாக்குதல் தொடுத்து எல்லா வழிமுறைகள் மூலமாகவும் அவர்களை கொன்றார்கள்.

சஹீஹ் புகாரியின் விளக்கவுரையாளரான அல்லாமா அய்னீ எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தோருடன் ஏன் போர் செய்தார்கள் என்றால், அம்மக்கள் வாளின் மூலமாக ஸகாத்தை தடுத்து நிறுத்தினார்கள். மேலும் இஸ்லாமிய சமுதாயத்திற்கெதிராக போரை உருவாக்கினார்கள்.

இமாம் கத்தாபி எழுதுகிறார்கள்: இவர்களைக் குறித்து முர்தத் என்று ஏன் கூறப்படுகிறது என்றால், இவர்கள் முர்தத்களின் கூட்டத்தில் இணைந்து விட்டிருந்தனர்.

இந்த வரலாற்று சான்றுகளின் சாராம்சம் என்னவென்றால், இவ்வாறான முர்தத்கள் அரசாங்கத்திற்கெதிராக திட்டமிட்டு கிளர்ச்சி செய்தார்கள்; அரசாங்க செல்வத்தை கொள்ளையடித்தார்கள்; முஸ்லிம்களை கொலை செய்தார்கள்; அவர்களை உயிருடன் எரித்தார்கள்; இக்காரணங்களால் முர்தத்கள் மரண தண்டனைக்கு உரியவர்களாக ஆகிவிட்டிருந்தனர். திருக்குர்ஆன் கூறுவது போன்று,

إِنَّمَا جَزَٰٓؤُا الَّذِيْنَ يُحَارِبُوْنَ اللّٰهَ وَ رَسُوْلَهٗ وَ يَسْعَوْنَ فِي الْاَرْضِ فَسَادًا اَنْ يُّقَتَّلُوْٓا اَوْ يُصَلَّبُوْٓا اَوْ تُقَطَّعَ اَيْدِيْهِمْ وَ اَرْجُلُهُمْ مِّنْ خِلَافٍ اَوْ يُنْفَوْا مِنَ الْاَرْضِ ؕ

**எவர்கள் அல்லாஹ்வுடனும், அவனது தூதருடனும் போரிடுவார்களோ மேலும் பூமியில் குழப்பத்தை விளைவிக்க முயற்சி செய்வார்களோ அவர்களுக்கான தண்டனை என்னவென்றால், அவர்கள் கடுமையாக கொல்லப்பட வேண்டும். அல்லது சிலுவையிலறைந்து கொல்லப்பட வேண்டும். அல்லது மாறு கை மாறு கால் வெட்டப்பட வேண்டும். அல்லது நாட்டை விட்டு அவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். (திருக்குர்ஆன் 5: 34)**

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:* **மீதமுள்ள குறிப்புகள் இனிவரும் காலத்தில் எடுத்துரைக்கப்படும்.**

*ஹுஸூர் அவர்கள் குத்பாவின் இறுதியில் ஓய்வுபெற்ற முரப்பியும் தற்போது அமெரிக்காவில் வசித்து வந்த மதிப்பிற்குரிய முஹம்மது பஷீர் ஷாத் சாஹிப், சியால்கோட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய ராணா முஹம்மது சித்தீக் சாஹிப், இஸ்லாமாபாதைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் மஹ்மூது அஹ்மத் காஜா சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களின் ஜமாஅத் தொண்டுகளைப் பற்றி விரிவாகக் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா ஃகாயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவிப்பும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**